# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 27

## திரித்துவம் பற்றின ஆராய்ச்சி

## பரிசுத்தஆவி பாகம்–1




## The Study of Trinity Part - 1

## HOLY SPIRIT

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## திரித்துவம் பற்றின ஆராய்ச்சி
## பாகம்-1
## பரிசுத்தஆவி



கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,
இப்போது நாம் திரித்துவம் பற்றிய ஆராய்ச்சி செய்வோம். இன்று உலகம் முழுவதும் கிறிஸ்தவர்களால் உறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உபதேசம் திரித்துவ உபதேசமாகும்.

திரித்துவம் என்றால் மூன்று கடவுள்கள் ஒரே கடவுளாக - அதாவது பிதா குமாரன் பரிசுத்தஆவி மூன்றுபேராக இருந்தாலும், ஒரே கடவுளாக(திரியேக தேவனாக) இருப்பதாக உள்ள கொள்கையே திரித்துவக் கொள்கையாகும். மேலும் இம்மூவரும் சமநித்தியர், சம வல்லமை, மற்றும் பிரிக்கமுடியாதவர்களாகவும் உள்ளதாகவே நம்புகின்றனர்.

மேலும், இது மனிதரால் புரிந்துகொள்ளமுடியாத உபதேசமாக கற்பிக்கின்றனர். பொதுவாக வேதத்தில் எந்தவொரு அதிசயங்களையும் மறைபொருள்களையும் புரிந்துகொள்வது கடினமாக இருந்தாலும், தேவ கிருபையினால் முயற்சி செய்தால் தேவன் நமக்கு அதை விளங்கச்செய்வார்.

**ஏசாயா 1:18**

**'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்"**

**எரேமியா 33:3**


**'என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவுகொடுத்து, நீஅறியாததும்உனக்குஎட்டாததுமானபெரியகாரியங்களைஉனக்குஅறிவிப்பேன்"**


மாறாக, புரிந்துகொள்ளவே முடியாது எனக் கூறுவது தேவ சித்தமல்ல என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஆக, திரித்துவ உபதேசம் உண்மையிலேயே புரிந்துகொள்ளமுடியாதது தானா?

சாதாரண கணக்கில்கூட 1+1+1=3 வரவேண்டுமேயொழிய 1+1+1=1 என்பது எவ்வாறு? இன்றைக்கு வேதத்தில் ஒரு வார்த்தையோ வசனமோ அல்லது அவைகளின் மூலப்பொருள்களை அறியவேண்டுமெனில், அநேக வேத அகராதிகள் மற்றும் கம்பியூட்டரில் குறிப்பிட்ட பொத்தானை அழுத்தினால் அநேக அகராதிகள் மூலம் மிகச் சுலபமாக

அறிந்துகொள்ளலாம்.

அவ்வாறிருக்க திரித்துவம் அல்லது திரியேக தேவன் என்பது போன்ற வார்த்தை வேதாகமத்தில் எந்த வசனத்தில் உள்ளது என கம்பியூட்டரில் அறிய முற்பட்டால் வேதத்தில் இவ்வார்த்தை இல்லை என்றே தெரிவிக்கும்(TRINITY - Triune God - Not found in the Bible). வேதத்தில் ஒரு வார்த்தை இல்லையென்றால் நாம் எவ்வாறு அவ்வார்த்தையின்மேல் விசுவாசம் வைக்கமுடியும்? அது மகா பரிசுத்தமான விசுவாசமாயிருக்குமா? யோசிக்கவேண்டும் அன்பானவர்களே.







மேலும், இது வேதத்தின் படியான உபதேசமாயிருந்தால் இவ்வார்த்தை அநேக இடங்களில் வரவேண்டும். ஆனால் வேதத்தில் ஒருஇடத்தில்கூட வரவில்லையே என்பது ஆச்சரியமான விஷயமல்லவா?

இவ்வாறிருக்க இன்று அநேக சபைகளின் பாடல் புத்தகங்களிலும், விசுவாசப் பிரமாணங்களிலும், ஜெபங்களிலும் , படங்களிலும், திரித்துவம், திரியேகதேவன் என்று போடப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.



ரோமாபுரியில் வாட்டிகனில் உள்ள ஒரு படத்தில் 3 பேர்களில் ஒன்று பிதாவைக் குறிக்கும் வகையில் ஒருமுகம் வெள்ளைத் தாடியுடனும், இரண்டாவது முகம் கறுப்பு தாடியுடன் குமாரனைக் குறிக்கும் முகமாகவும், நன்கு மழிக்கப்பட்ட முகமாக பரிசுத்தஆவியைக் குறிக்கும் மூன்றாம் முகமாகவும் வரையப்பட்டு மூன்று முகங்களும் ஒன்றுடன்ஒன்று இணைந்து மொத்தமாக நான்கு கண்களும், நான்கு கால்களுமாக கடவுள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது.





மேலும் திரித்துவம் பற்றிய பெரிய பெரிய வல்லுனர்களும், இதற்கான விளக்கம் பற்றிக் கூறும்போது முட்டை(மேல்தோல், வெள்ளைக்கரு, மஞ்சள் கரு) தண்ணீர்(ஆவி, நீர், பனிக்கட்டி), பழம்(மேல்தோல், தசைப்பகுதி, விதை), மூன்று சக்கரவண்டி(மூன்று சக்கரங்களும் ஒரே சமயத்தில் சுழல்வது) மின்சாரம் (சுவிட்ச், ஒயர், பல்பு)இவையனைத்தும் எவ்வாறு ஒன்றுக்குள் ஒன்று உள்ளதோ, அதேபோல கடவுள்களும் உள்ளதாக விளக்கம்

தருகின்றனர்.

ஆனால் அன்பானவர்களே, இவ்விளக்கம் வேதத்தின்படியான உண்மையான உபதேசமா?

**ஏசாயா 8:20**

**'வேதத்தின்படி ஒருவன் சொல்லாவிட்டால் அவனுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை என வாசிக்கிறோமே.**

ஆக, திரித்துவம் என்ற வார்த்தை வேதத்தில் இராவிட்டாலும், திரித்துவக்கொள்கை உள்ளதாக அநேகர் நம்புகின்றனர். அதற்கு ஆதாரமாக

**1யோவான் 5:7**

**'பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்"**

ஆனால் இவ்வசனம் அடைப்புக்குறியில் போடப்பட்டிருப்பதைக் காண்க. 16ம் நூற்றாண்டிற்கு முன்பு இருந்த கைப்பிரதிகளில் இவ்வசனம் இல்லை என்றுNIVபைபிளிலும் Revised American Standard' பைபிள்களிலும் குறிப்பில் தரப்பட்டுள்ளதுடன், இப்போது வரும் திருத்திய மொழிபெயர்ப்புகளிலும் இவ்வசனம் இல்லை. இவ்வசனம் திரித்துவக் கொள்கையாளர்களால் சேர்க்கப்பட்ட வசனம் என்பது தெளிவாகப் புரிகிறது.

மேலும் திரித்துவ உபதேசத்துக்கு ஆதாரமாக கீழ்க்காணும் வசனத்தையும் பயன்படுத்துகின்றனர்.

**மத்தேயு 28:19**

**'ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா , குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து.."**

இங்கு கர்த்தர் ஞானஸ்நானம் (தண்ணீரில் மூழ்குதல்) பற்றிப் பேசியிருந்தால், அவருடைய சீஷர்கள் கண்டிப்பாக மற்றவர்களுக்கு ஞானஸ்நானம் தரும்போது, இவ்வாறு இல்லாமல் இயேசுவின் நாமத்தினால் மாத்திரம் கொடுத்தார்கள் எனப் பார்க்கிறோம்.

**அப்போஸ்தலர் 2:38**

**'பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.."**

மேலும் **அப்போஸ்தலர் 19:5 மற்றும் 10:48** வசனங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஏன் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை மீறிவிட்டார்களா? இல்லை.

ஏனெனில் கர்த்தர் அங்கு கூறும்போது, ஞானஸ்நானம் எடுக்கவேண்டிய முறையைப் பற்றிக் கூறாமல், சகல ஜனங்களுக்கும் பிதா குமாரன் பரிசுத்தஆவி பற்றிய ஞானத்தில் மூழ்க அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டார். இது சம்பந்தமாக விரிவாக வேறொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

மேலும் திரித்துவ உபதேசம் 4ம் நூற்றாண்டிற்குப் பிற்பாடுதான் சபைக்குள் நுழைந்ததே தவிர அதற்குமுன்பு இப்பேர்ப்பட்ட உபதேசம் இல்லை. நமது கர்த்தரோ அல்லது அவருடைய சீஷர்களோ இந்த திரித்துவ உபதேசத்தை உலகிற்கு கொண்டுசென்றனர் என்பதற்கு எவ்வித ஆதாரமும் வேதத்தில் இல்லை, மாறாக இது உலகின் மற்ற அனைத்து புற மதஸ்தருடைய உபதேசமே ஆகும்.

ஆக, திரித்துவம் அல்லது திரியேக தேவன் என்ற வார்த்தையோ அல்லது திரித்துவக் கொள்கையோவேதத்தில் இல்லை என்பதைப் பார்த்தோம். இது சம்பந்தமாக வேதம் என்ன கூறுகிறது? முதல் பாகமாக பரிசுத்தஆவியைக் குறித்து ஆராய்வோம்.

## பரிசுத்தஆவி

பரிசுத்தஆவி கடவுளின் மற்றொரு ரூபமா?அல்லது இயேசுகிறிஸ்துவைப் போல தனி ஆளா? வேதத்தில் சில இடங்களில் பரிசுத்தஆவி பரிசுத்தஆவியானவர் என்றும் தேவனுடைய ஆவியானவர் தேவ ஆவி எனவும், தேற்றரவாளன் , அவர், அது என்றும் உள்ளதால், அநேகர் பரிசுத்தஆவியை ஒரு நபர் என்றே விசுவாசிக்கின்றனர். பழைய ஏற்பாட்டில் பிதாவாகவும், பின்பு பிதாவே குமாரனாகவும், அவரே பரிசுத்தவஆவியானவராக தற்போது இருக்கிறார் எனவும் விசுவாசிக்கின்றனர். இது உண்மையா?

**யோவான் 17:3**

**‘ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்”**

எனும்போது, இங்கு பரிசுத்தஆவியானவரைப் பற்றின அறிவு நமக்குத் தேவையில்லையா?

மேலும், இவ்வதிகாரம் முழுவதும் நம் கர்த்தருடைய ஜெபமாக உள்ளதால், பிதாவிடம் மாத்திரமே தன் ஜெபத்தை கூறுகிறாரே தவிர, பரிசுத்தஆவியானவரிடம் தன் ஜெபத்தை ஒருமுறைகூட ஏறெடுக்கவில்லையே.

**யோவான் 3:34**

**‘தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்”**

இங்கு பரிசுத்தஆவி ஒரு நபராக இருந்தால் எவ்வாறு அளந்து அல்லது அளவில்லாமல் கொடுக்கமுடியும்? இதைக்குறித்து வாசிப்போம் -

**லூக்கா 24:49**

**‘என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை** (யோவான் 14:26ல் ஒப்பிடவும்) **இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்”**

இங்கு பரிசுத்தஆவியைப் பற்றி உன்னதத்திலிருந்து வரும் பெலன் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.



**அப்போஸ்தலர் 2:33**

**’அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்”**

இங்கு பரிசுத்தஆவி ஒரு நபராயிருந்தால் எவ்வாறு பொழிந்தருள முடியும்? ஆனால் ஓர் சக்தி அல்லது ஆவியை அநேகர்மேல் பொழிந்தருள முடியுமல்லவா?

**அப்போஸ்தலர் 2:17,18**

**’நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.. என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் , அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன்..”**

ஒரு நபரை எவ்வாறு எல்லார்மேலும் ஊற்றமுடியும்?

மேலும் **எசேக்கியேல் 39:29**

**’நான் இஸ்ரயேல் வம்சத்தார்மேல் என்ஆவியை ஊற்றினபடியினால்..”**

என்று பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஆவி எனக் கூறப்பட்டுள்ளதைக் காண்க.

**ஏசாயா 63:12**

**‘அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்தஆவியை இருக்கக் கட்டளையிட்டு..”**

**ஏசாயா61:1**

**‘கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்”**

ஆங்கிலத்தில் Spirit of God என்பதை தேவனுடைய ஆவி என்பதற்கு பதிலாக, தேவனுடைய ஆவியானவர் என மொழிபெயர்த்திருப்பதைக் கவனிக்கவும்.

**ஏசாயா 11:1,2**

**‘ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர்தோன்றி அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும்ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்”**

மூல பாஷையில் ஆவி(Spirit) அல்லது பரிசுத்தஆவி என்பதற்கு ரூவா (Ruwach)என எபிரேயு பாஷையிலும், நியூமா(Pneuma) என கிரேக்க பாஷையிலும் உள்ளது. இவ்விரு வார்த்தைகளின் பொருள் என்னவெனில், காற்று (Wind), சுவாசம், ஆவி (Invisible, Immaterial, Powerful - கண்ணுக்குப் புலனாகாத, உடலில்லாத, வல்லமையுள்ள) என்று Strong’s Concordance No.7307-Hebrew, No.4151 - Greek ல் அறியலாம்.

**<u>Strong's Greek Lexicon Search Results</u>**

**<u>Result of search for "Pneuma":</u>**

4151. pneuma pnyoo'-mah from 4154; a current of air, i.e. breath (blast) or a breeze; by analogy or figuratively, a spirit, i.e. (human) the rational soul, (by implication) vital principle, mental disposition, etc., or (superhuman) an angel, demon, or (divine) God, Christ's spirit, the Holy Spirit:--ghost, life, spirit(-ual, -ually), mind. Compare 5590.

**<u>Result of search for "Ruwach":</u>**

7306 ruwach roo'-akh a primitive root; properly, to blow, i.e. breathe; only (literally) to smell or (by implication, perceive (figuratively, to anticipate, enjoy):--accept, smell, X touch, make of quick understanding.
7307 ruwach roo'-akh from 7306; wind; by resemblance breath, i.e. a sensible (or even violent) exhalation; figuratively, life, anger, unsubstantiality; by extension, a region of the sky; by resemblance spirit, but only of a rational being (including its expression and functions):--air, anger, blast, breath, X cool, courage, mind, X quarter, X side, spiritual), tempest, X vain, (whirlwind(-y). 7308 ruwach roo'-akh (Aramaic) corresponding to 7307:--mind, spirit, wind.

**அப்போஸ்தலர் 2:2**

**'அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று"**



ஆக பரிசுத்தஆவி ஒரு நபரைக் குறிக்காமல் தேவனுடைய வல்லமை, அல்லது சக்தியைக் குறிக்கிறதாக உள்ளது.

பரிசுத்தஆவியை வேதத்தில் அநேகவிதமாக அழைக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

1. தேவனுடைய ஆவி(மத்தேயு 3:16)
2. கிறிஸ்துவின் ஆவி (1பேதுரு 1:11)
3. பரிசுத்தமுள்ள ஆவி(ரோமர் 1:4)
4. சத்திய ஆவி(யோவான் 14:7)
5. தெளிந்த புத்தியுள்ள ஆவி(1தீமோத்தேயு 1:7)
6. வாக்குத்தத்த ஆவி (எபேசியர் 1:13)
7. சாந்தமுள்ள ஆவி(கலாத்தியர் 6:1)

8. ஞானத்தின் ஆவி(ஏசாயா 11:2)
9. புத்திர சுவிகாரத்தின் ஆவி (ரோமர் 8:15)
10. தீர்க்கதரிசனத்தின் ஆவி(வெளிப்19:10)

ஆக, இங்கு கூறப்பட்டுள்ள அனைத்து பெயர்களின் பின்னால் அவர் சேர்த்தால் இவையனைத்தும் இவர்கள் ஆக முடியுமா?

வேதத்தில் அசுத்தஆவிகூட உள்ளதே, அவற்றிற்கும் அநேக பெயர்கள் தரப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

1. பயத்தின் ஆவி(2தீமோத்தேயு 1:7)
2. அடிமைத்தனத்தின் ஆவி(ரோமர் 8:15)
3. உலகத்தின் ஆவி(1கொரிந்தியர் 2:12)
4. வஞ்சக ஆவி(1யோவான் 4:16)
5. குறி சொல்லுகிற ஆவி(அப்போஸ்தலர் 16:16)
6. அந்திக்கிறிஸ்துவின் ஆவி (1யோவான் 4:3)
7. கனநித்திரையின் ஆவி(ரோமர் 11:8)

இவையனைத்தின் பின் அவர் சேர்ந்தால் நபர்கள்ஆக முடியுமா?
மேலும், தேவனுடைய வல்லமை அல்லது ஆவி அநேக வகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதை வேதத்தில் காணலாம்.

**ஆதியாகமம் 1:2** **' தேவ ஆவியானவர் (Spirit of God) ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்"**

ஆங்கில வேதாகமத்தில்(Today's English version) -
**"..And the Power of God was moving over the water"** என்றுள்ளதை கவனிக்கவும்.

அதாவது பூமியை மனிதனின் குடியிருப்புக்காக தேவனுடைய வல்லமை அல்லது ஆவி வேலைசெய்ய ஆரம்பித்ததையே இவ்வசனம் குறிக்கிறதேயொழிய ஆவியானவர் தண்ணீர்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் என்பது எவ்வாறு பொருந்தும்.

**நியாயாதிபதிகள் 14:6**

**'..இதோ கர்ச்சிக்கிற பாலசிங்கம் அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது**



**கர்த்தருடைய ஆவி பலமாக இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக் குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான்"**

மற்றும் 15:14-15லும் தேவனுடைய ஆவி சிம்சோன்மேல் இறங்கினதால் ஒரு கழுதையின் தாடையினால் 1000பேரைக் கொன்றதாக பார்க்கிறோம். இயந்திர துப்பாக்கியினால்கூட இவ்வளவு பேரை கொல்லமுடியாதே.

ஆசரிப்பின் கூடார நுணுக்கமான வேலை செய்வதற்காக பெசலேயேலை தேவன் தம் ஆவியினால் நிரப்பினார்.

**யாத்திராகமம் 31:2-3**

**'நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்..மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்"**

ஏனெனில் எகிப்தில் அடிமைகளாக இருந்த இந்த ஜனங்கள் எவ்வாறு பொன்னிலும் வெள்ளியிலும் சிற்பவேலைகளை செய்யமுடியும்? ஆகவே தேவன் தம்முடைய ஆவியை அவருக்குத் தரும்போது அவர் இவ்வேலையில் தேர்ச்சிபெற்றார்.

**அப்போஸ்தலர் 2:18**

**'என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்"**

தேவனுடைய ஆவி வரும்போது தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் எனும்போது, தேவனுடைய திட்டங்களை விளக்குவார்கள். தங்களுடைய சொந்த கனவுகளை சாட்சிகளையல்ல.

**வெளி 19:10**

**'இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாய் இருக்கிறது"**
என வாசிக்கிறோம். மேலும் பரிசுத்த ஆவியின் வரங்கள் அநேகமாயிருக்கிறது என்பதையும் கீழ்க்காணும் வசனத்தில் காண்கிறோம்.

**1கொரிந்தியர் 12:9,10**

**'வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுவதும், வேறொருவனுக்குப்**

**பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது"**

மேலும், அப்போஸ்தலரும், ஆதிசபை மக்களும் பரிசுத்தஆவியை ஒரு கடவுளாக எண்ணாமல், அது தேவனுடைய வல்லமை என்றே நன்கு அறிந்து வைத்திருந்தனர். அப்போஸ்தலர் தங்கள் நிருபங்களில் வாழ்த்துதல் சொல்லும்போது,

**'பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுவினாலும் உங்களுக்கு கிருபை உண்டாவதாக"**

என்றே சொல்லியிருக்கிறார்கள் (1கொரிந்தியர் 1:3, கலாத்தியர் 1:3, பிலிப்பியர் 1:2, யாக்கோபு 1:1, 2பேதுரு 1:2, 1யோவான் 1:3 வாசித்தறியவும்)

அது மாத்திரமல்ல, கர்த்தருடைய வார்த்தையைப் படிக்கும்போது,

**யோவான் 14:1**

**'..தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்"**

என்கிறாரே தவிர, பரிசுத்தஆவியானவரிடத்திலும் விசுவாசமாயிருங்கள் என்று கூறவில்லை.

அவ்வாறிருக்கும்போது, பரிசுத்தஆவி எவ்வாறு ஒரு நபராகும் விசுவாசம் வந்தது?

யோவான் 16:7,14 மற்றும் 14:16,26 மற்றும் 15:26ல், வேறொரு தேற்றரவாளன் என பரிசுத்தஆவிக்கு ஒப்புமைப்படுத்தி கூறப்பட்டுள்ளதால் அது ஒரு நபராக எடுத்துக்கொண்டனர்.

இங்கு வேறொரு தேற்றரவாளன் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, மூவரும் ஒருவரே எனக் கூறப்படவில்லை. மேலும், யோவான் சுவிசேஷத்தில் மாத்திரம் பரிசுத்தஆவியை ஆள் தத்துவத்தில் பேசப்பட்டுள்ளது.

யோவான் 14ம் அதிகாரம் முதல் 17ஆம் அதிகாரம் வரை தன் மரணத்திற்கு முன்பு சீஷர்களை திடப்படுத்தும்பொருட்டு கர்த்தர் தொடர்ச்சியாக பேசின வார்த்தைகள் பதியப்பட்டுள்ளது.அவற்றுள் சில வசனங்களை பார்க்கலாம் -

**யோவான் 14:6,7**

**'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். என்னை அறிந்திருந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்.."**

**யோவான் 14:23**

**'ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்.அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்."**

**யோவான் 15:1-5**

**'நானே மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர்**

**அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்.. என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது"**

**யோவான் 16:16**

**'நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியால், கொஞ்சகாலத்தில் என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள்"**

என்றெல்லாம் சொல்லும்போது, சீஷர்களால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை(யோவான் 16:18). சீஷர்கள் கர்த்தரிடம் கேட்கும்போது,

**யோவான் 16:25** **'இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்"** என்றார்

ஆக, தேற்றரவாளன் என்பது உவமை பாணியே தவிர தனி நபராக கர்த்தர் கூறவில்லை. ஏனெனில் தேற்றரவாளன்(பரிசுத்தஆவி) ஒரு நபராக எடுத்துக்கொண்டால், திராட்சச்செடி, வழி என்பதையும் அவ்வாறே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆக, நம் கர்த்தரை திராட்சைச் செடியாக சொல்லமுடியுமா?

மேலும் சில இடங்களில் பரிசுத்தஆவியை 'அவர்" என்று கூறப்பட்டிருப்பதையும் கவனிக்கவேண்டும். வேதத்தில் சொல்லப்பட்ட அநே ஆவிகளை அவர் என்று சொல்லாமல் பரிசுத்தஆவிக்கு மட்டும் சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய வல்லமையை மரியாதை செய்து அவ்வாறு போடப்பட்டுள்ளது அவர் என்ற சொல் கிரேக்க பாஷையில் ஹாட்டோ(Heautou) என்பதாகும். இவ்வார்த்தையை அவர், அவள், அது என்றும் மொழிபெயர்க்கலாம். சில முக்கியமான பொருள்களுக்கு நாமே மரியாதை கொடுத்து சொல்கிறோமே. உதாரணத்திற்கு சூரியனை அவன் என்றும், சந்திரனை அவள் என்றும், நாடுகளையும், நதிகளையும், கப்பல்களையும் பெண்பாலில் குறிப்பிடுகிறோமே.

**லூக்கா 11:13**

**'பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்தஆவியை கொடுப்பது அதிக நிச்சயமல்லவா"**

என்றார். அதாவது பரிசுத்தஆவி நமக்கு வேண்டி பிதாவிடம் ஜெபிக்கலாமே தவிர, பரிசுத்தஆவியிடம் ஜெபம் செய்வது எவ்வாறு ஏற்புடையதாகும்? இன்று அநேகர் ஆவியானவரிடம் ஜெபிக்கிறார்களே யோசிக்கவேண்டும். அவ்வாறான ஜெபம் கர்த்தரோ, சீஷர்களோ செய்ததாக வேதத்தில் இல்லை.

**மத்தேயு 12:31,32**

**'எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்தஆவிக்கு விரோதமாக பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை"**

திரித்துவ உபதேசத்தில் மூவரும் சமம் என்றால், இங்கு மனுஷகுமாரன் பரிசுத்தஆவிக்கும் கீழானவரா? அதாவது, இயேசுவைத் தெரியாமல் அவருக்கு விரோதமாக என்ன செய்தாலும் மன்னிக்கப்படும்.

ஆனால் தேவனுடைய பரிசுத்தஆவியைப் பெற்று, பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்தால் அது மன்னிக்கப்படுவதில்லை. இதனை பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம் -

**எபிரேயர் 6:4-6**

**‘ ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்தஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிப்பது கூடாத காரியம்”**

அப்போஸ்தலர் 8:29,39, 13:2, 10:19, 16:6, 20:23 - இவைகளில் பரிசுத்தஆவியானவர் பேசினதுபோல் சொல்லப்பட்டிருப்பது தேவனுடைய வழிநடத்துதலில் பரிசுத்த ஆவியானது மனதுக்குள் இருந்துவரும் உந்துதல் ஆகும். நாமே அநேக சமயங்களில் மனசாட்சி சொல்லியது என்கிறோமே. அதுபோல பரிசுத்த ஆவியினால் ஏற்படும் உற்சாகம் இங்கு பேசினதுபோல் தரப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.

**மத்தேயு 28:19**

**‘இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”**

இவ்வசனத்தில், கர்த்தர் தம்முடைய பரிசுத்தஆவியை அவர்களுக்கு தந்து அவர்களுக்குள் இருப்பதையே குறிப்பிடுகிறார்.

**ரோமர் 8:16**

**‘நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுக்கிறார்”**

KJVஆங்கில வேதாகமத்தில் ஒப்பிட்டுப் பார்க்கவும்

இங்கு சொல்லப்பட்ட வார்த்தைகளை கவனிக்கும்போது நம்முடைய ஆவியுடனே என்றால் நாம் வேறு , நம்முடைய ஆவி வேறா? என்றால், இங்கு நம்முடைய உள்ளத்தையே குறிக்கிறது. அவருடைய வசனங்களின் மூலம் தேவன் நம் உள்ளத்தில் பேசுகிறார் என்பதே இவ்வசனத்தின் கருத்து.

**ரோமர்8:26** **’நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.**

அதாவது, தேவனுடைய பரிசுத்தஆவி கிடைக்காதபோது, தேவனுக்கு பிரியமானபடி ஜெபம்செய்ய தெரியாததால், நமக்குள் உள்ள பரிசுத்தஆவியின்மூலம் தேவனுக்கு ஏற்றபடி ஜெபிக்கமுடியும் என்பதே இதன் கருத்து.

**2கொரிந்தியர் 6:19**

**உங்கள்சரீரமானது பரிசுத்தஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்று அறியீர்களா?**

**எபேசியர் 4:30**

**'பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்"**

என்று கூறும்போது, பரிசுத்தஆவிக்கு விரோதமாகப் பாவஞ்செய்தால் தேவனை துக்கப்படுத்துவதையே இவ்வாறு இங்கு கூறப்பட்டுள்ளது.

**1தெசலோனிக்கேயர் 4:8**

**'ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்"**

ஆக, தேவனுடைய வசனத்தில் இவ்வள
வு தெளிவான ஆராய்ச்சி செய்யும்போது பரிசுத்தஆவி தேவனுடைய வல்லமை அல்லது உன்னதத்திலிருந்து வரும் பெலன் என்று பார்க்கிறோமே தவிர தனிக்கடவுளாக அல்ல. தேவன் தந்த இந்த மகத்தான சத்தியத்திற்கு அவருக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போமாக.

**உம்முடைய வசனமே சத்தியம்.**

**தேவன்தாமே நமக்கு கிருபை அளிப்பாராக ஆமென்.**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/